# உடுக்கை பாட்டு

கங்கையின் வேகம் கொண்டு
காசியில் வேதம் கண்டு
சிங்கமென எங்க பக்கம்
வந்த துரையே
யோகிராமா சுரத்குமாரா
பொங்கு தமிழ் நாட்டில்
உந்தன் அன்பு மழையே

சீமைத் துரைகளெல்லாம்
சுற்றிப் பணிந்து நின்று
சல்லாபம் பண்ணுகிற
எங்க துரையே
செங்கதிர் வானம் போல
செங்கமல வாசம் வீச
மெய்ஞ்ஞானம் பேசுகின்ற
சாமித்துரையே

( யோகிராமா)

ஆசாமி பத்துப் பேரு

அரசியல் வெத்து வேட்டு

மோசங்கள் பண்ணும் போது

எங்க துரையே

மூச்சாலே தூக்கிப் போட்டு

ஆட்சியை மாற்றிக் காட்டி

பேசாது யுத்தம் செய்த

பாண்டித்துரையே

( யோகிராமா)

கண்ணின் கருமணியாம்

உந்தன் அடியாரெல்லாம்

(2 முறை)

வாசலில் கூடி நின்று
எங்க துரையே
சிந்தனை பந்தம் பண்ணி
உன் நாம வேதம் சொல்ல
வாய்விட்டு சிரிப்பதென்ன

சாமி துரையே....

( யோகிராமா)

பிச்சை புகுதல் நன்று
போடுதல் நீதியென்று
இச்சையின்றி சொல்லித்தந்த
எங்க துரையே
சித்தமுடன் வந்து நின்றோம்
புத்தியென்ற எங்கள் ஓட்டில்
பிச்சையிடு காதல் சோறு
எங்க துரையே.........

( யோகிராமா)

நீயிட்ட பிச்சை சோறு

உண்டதும் மோகம் போச்சு

நீரிட்ட தீயைப்போல

எங்க துரையே

நெருப்பினில் பஞ்சைப் போல

நானென்னும் கர்வம் போக

உன்னுள் கரைந்து போனேன்

காசித் துரையே......

( யோகிராமா)

அதிகாரம் பண்ணிப் பண்ணி

அச்சங்கள் மிச்சத்தோடு

புதிராக இருந்த நெஞ்சில்

எங்க துரையே

சத்தியத்தை நாட்டி வைத்து

சாமி பேரும் சொல்லப் பண்ணி

உச்சத்தில் கொண்டு வைத்தாய்

ராம துரையே.......

( யோகிராமா)

அச்சங்கள் ஏதுமின்றி

ஆர்ப்பாட்டக் கூச்சலின்றி

ஆனந்தம் வந்தபோது

எங்க துரையே

சொச்சமாம் வாழ்வு நாளை

சுகமாக உந்தன் பேரைச்

சொல்லியே இங்கிருப்போம்

ஞானத் துரையே........

( யோகிராமா)